**நாள்.11.02.20 CC.No.304/2010 அசா.1 குணசுந்தரி**

**(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி)**

1 ஆம் எதிரி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் போடிபட்டி கிராமத்தில் க.ச.எண். 95 ல் இருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்தில் 1 ஆம் எதிரி OS.No. 109/2009-ல் எங்கள் மீது இடைக்கால உறுத்துக் கட்டளை பெற்றிருந்தார் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை யார் எழுதிக் கொடுத்தது என்றால் எனது மருமகன் எழுதிக் கொடுத்தார். அசா.2 எனது மகள் என்றால் சரிதான். எங்களால் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு பின்பு விசாரணையில் எங்களது வழக்கு பிழையானது என்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்காக தான் இந்த தனி நபர் புகாரை தாக்கல் செய்திருக்கிறேன். க.ச.எண்.95 தொடர்புடைய பூமி 1 ஆம் எதிரி பெயரில் இருக்கிறது என்றால் சரியல்ல. அது தொடர்பாக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காகத் தான் எதிரிகள் மீது பொய் புகார்கள் கொடுப்பதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல், 1 ஆம் எதிரியை மிரட்டி பணியவைக்க வேண்டும் என்பதற்காகத் தான் எந்த தொடர்பும் இல்லாத அவருடைய மருமகளையும் இந்த புகாரில் எதிரியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், நடக்காத ஒரு சம்பவத்தை நடந்தது போல் ஜோடித்து இந்த புகாரை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும், எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.